**2012**

தினகரன் 15
மதுரை 18 ஜனவரி 2012



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த தேசிய இளைஞர் தின விழாவில் துணைவேந்தர் சேதுகடலைமுத்து பேசினார்.

# ஆன்மீகம் சார்ந்த கல்வி அவசியம்

## துணைவேந்தர் பேச்சு

காரைக்குடி, ஜன. 18: மாணவர்களுக்கு சமுதாய ஈடுபாட்டை உருவாக்க ஆன்மீகம் சார்ந்த கல்வி அவசியம் என, அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சேதுகடலைமுத்து தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தேசிய இளைஞர் தினவிழா கொண்டாடப்பட்டது. உயிரி தகவலியல் துறைத்தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். தேர்வாணையர் மாணிக்கவாசகம், ஆட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணராஜ், திருப்பராய்த்துறை ராமகிருஷ்ணா தபோவனம் சுவாமி சந்திரசேகரானந்தா, கோவை பாரதியார் பல்கலைக்கழக மேலாண்மையியல் துறைத்தலைவர் வெங்கடபதி கலந்து கொண்டனர்.

தலைமை வகித்து துணைவேந்தர் சேதுகடலைமுத்து பேசியதாவது:

அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆண்டு முழுவதும் 40க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. நாட்டில் அதிகளவில் இளைஞர்கள் உள்ளனர். நாட்டின் முன்னேற்றத்துக்கு ஒவ்வொரு இளைஞர்களின் பங்கு அவசியம். மாணவர்களுக்கு ஆன்மீகம் சார்ந்த கல்வி, கல்வி அறிவை தருவதோடு, அவர்களுக்கு சமுதாய ஈடுபாட்டை வளர்க்க உதவும். இன்றைய இளைஞர்கள் விவேகானந்தர் வழியில் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும்.

தன்னம்பிக்கை, வலிமை, ஒழுக்கம், போன்ற உயர்ந்த குணங்கள் இளைஞர்களிடம் உருவாக வேண்டும். அறிவியல் மற்றும் பொருளாதாரம் மட்டுமே மக்களின் பிரச்னைகளை தீர்த்துவிடாது. மக்களிடம் மனிதநேயம் வளர வேண்டும். மனிதநேயம்தான் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் என பேசினார். என்எஸ்எஸ் ஒருங்கிணைப்பாளர் குருமூர்த்தி நன்றி கூறினார்.

தினத்தந்தி

உலக வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் சீர்கேடு காரணமாக

# மருந்துகளின் தன்மை, தேவை மாறிவருகிறது

## துணைவேந்தர் சேது.சுடலைமுத் து பேச்சு

காரைக்குடி,பிப்.22-
உலக வெப்பமயமாதல், சுற்று சூழல் சீர்கேடு காரணமாக மருந்துகளின் தன்மை, தேவை மாறி வருகிறது என்று துணை வேந்தர் சேது. சுடலை முத்து கூறினார்.

### தேசிய கருத்தரங்கு

காரைக்குடி அழகப்பா பல் கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் கட்டமைப்பு உயிர் தகவலியல் மற்றும் கணினி சார்ந்த மருந்து கண்டு பிடிப்புகளில் நவீன வளர்ச்சி பற்றிய தேசிய கருத்தரங்கு 4 நாட்கள் நடைபெற உள்ளது. இதன் தொடக்க விழாவில் அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் சேது.சுடலை முத்து தலைமை தாங்கி பேசிய தாவது:-

நமது நாட்டின் தேவைக் கேற்ப புதிய மருந்துகளை வடி வமைத்தல் மற்றும் உருவாக் குதல் மிகவும்இன்றியமையாத தாகும். குறிப்பாக தற்சமயம் நிலவி வரும் உலக வெப்ப மயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் காரணமாக மருந் துகளின் தன்மையும், தேவை யும் மாறிக்கொண்டே வருகி றது.

ஒரு புதிய மருந்தை வடி வமைத்து உருவாக்க சுமார் 14 வருடங்களுக்கு மேலாகிறது. இதில் குரங்கு, எலி, நாய், தவளை போன்ற விலங்குகள் பெரும்மளவில் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. சமீபத்தில் இந்திய அரசு, இதுபோன்ற ஆய்வுகளுக்கு புதிய கட்டு பாடுகளை விதிக்க உத்தேசித் துள்ளது.

### கணினிமூலம் மருந்து உருவாக்குதல்

இச் சூழ்நிலையில், கணினி களை பயன்படுத்தி மருந்துகள் உருவாக்குதல் மற்றும் சோதனை செய்வது இன்றிமையாததேவையாகும். அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய பல்கலைக்கழகங்களில் மருந்து வடிவமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் துறையில் உயிரி தகவல் தொழில்நுட்பம் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அழகப்பா பல் கலைக்கழகத்தில் இது குறித்த ஆராய்ச்சிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின் றன.

இவ்வாறு அவர் கூறி னார்.

சென்னை பல்கலைக்கழகத் தின் படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறைபேராசிரியர் மற்றும்தலைவர் வேல்முருகன் தொடக்க உரையாற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக் கழக மரபு பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் கிருஷ்ணசுவாமி, ஐதரபாத் செல்லியல் மற்றும் மூலக்கூறு மைய பேராசிரியர் தங்கராஜ் ஆகியோர் பேசினர். உயிரி தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார்.

### ஆய்வாளர்கள்

கருத்தரங்கில் இந்தியாவின் வெவ்வேறு மாநிலத்தில் இருந்து ஏறக்குறைய 200க்கும் மேற்பட்ட அறிவியல் வல்லு நர்கள் மற்றும் மாணவர்கள், ஆய்வாளர்கள், அழகப்பா பல்கலைக்கழக உயிரியல் துறை தலைவர்கள், பேராசி ரியர்கள், ஆராய்ச்சி மாண வர்கள் மகலந்துகொண்டனர். முடிவில் கருத்தரங்க ஒருங்கி ணைப் பாளர் கார்த்திகேயன் நன்றி கூறினார்.



கருத்தரங்கில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சேது.சுடலை முத்து பேசிய போது எடுத்த படம்.




காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த தேசிய அளவிலான கருத்தரங்கில் விழா மலரை துணை வேந்தர் சேதுசுடலைமுத்து வெளியிட்டார்.

# கம்ப்யூட்டரை பயன்படுத்தி புதிய மருந்துகளை உருவாக்க வேண்டும்

## பல்கலை. துணைவேந்தர் பேச்சு

காரைக்குடி, பிப். 23: மருந்து கண்டுபிடிக்க குரங்கு, எலி, நாய், தவளைகளுக்கு பதில் ஆய்வுகளுக்கு கம்ப்யூட்டர்களை பயன்படுத்தி புதிய மருந்துகளை உருவாக்க வேண்டும் என அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் சேதுசுடலைமுத்து தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் கட்டமைப்பு உயிர் தகவலியல் மற்றும் கணினி சார்ந்த மருந்து கண்டிபிடிப்புகளில் நவீன வளர்ச்சி என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு

தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். கருத்தரங்கை துவக்கி வைத்து துணை வேந்தர் சேதுசுடலைமுத்து பேசியதாவது: அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி அறிவியல் துறை சிறப்பு பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை, உயிரி தொழில்நுட்பத்துறை, உயிரி தொடு உணர்வியல் மற்றும் மின்னணுவியல் துறை, நானோ தொழில்நுட்பத்துறை ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும்

நாட்டின் தேவைக்கேற்ப புதிய மருந்துகளை வடிவமைத்தல் மற்றும் உருவாக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். உலக வெப்பமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் காரணமாக மருந்துகளின் தன்மையும், தேவையும் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு புதிய மருந்தை வடிவமைத்து உருவாக்க சுமார் 14 வருடங்களுக்கு மேலாகிறது. இதில் குரங்கு, எலி, நாய், தவளை போன்ற விலங்குகள் பயன்படுத்தப்படுகிறது. மத்திய அரசு

உள்ளது. இந்நிலையில் கம்ப்யூட்டர்களை பயன்படுத்தி மருந்துகள் உருவாக்குதல் மற்றும் சோதனை செய்வது இன்றியமையாத தேவையாகும். இவ்வாறு பேசினார்.

சென்னை பல்கலைக்கழக படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறை பேராசிரியர் வேல்முருகன், மதுரை காமராசர் பல்கலைக்கழக கிருஷ்ணசாமி, செல்லியல் மற்றும் மூலக்கூறு மையம் பேராசிரியர் தங்கராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வது அவசியம்

## துணைவேந்தர்

ாரைக்குடி, அக். 29: பல்கலைக்கழக மாண ர்கள் தாங்கள் தேர்வு செய்த இலக்கு ளை அடைய வேண்டுமெனில் தனித்திற மைகளை வளர்த்துக்கொள்வது அவசியம் ன்று அழகப்பா பல்கலைக்கழகத் துணை வந்தர் சேது.சுடலைமுத்து தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் ில் தொழில் வழிகாட்டல் மற்றும் கலந் ாய்வு மையம் சார்பில் தொழில் வழிகாட் ல் மற்றும் மென்திறன் குறித்த 3 நாள் யிற்சி துவக்க விழா திங்கள்கிழமை நடை பெற்றது.

இதில் துணைவேந்தர் தலைமை வகித்துப் பசியதாவது:

ாட்டத்தில் அறிவுத்திறன் இருந்தும் மென் றன்களில் குறைந்த அளவு திறமைக ளயே மாணவர்கள் கொண்டிருப்பதால்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தொழில் வழிகாட்டல் மற்றும் மென்திறன் குறித்த பயிற்சி துவக்க விழாவில் பேசுகிறார் துணைவேந்தர் சேது. சுடலைமுத்து.

வேலைவாய்ப்புப் பெறமுடியாத சூழ்நிலை உள்ளது. திறமைகளை நன்கு கையாளவும், திறமைக்கேற்ப வேலைவாய்ப்பை அடைவதற்கும் மென்திறன் பயிற்சி அவசியம்.

கல்வி என்பது அறிவுசார் வளர்ச்சி மட்டுமல்ல. திறன் சார்ந்ததும் கல்வியாகும். அதனால் மாணவர்கள் ஆங்கிலப் பேச்சாற்றல், கணினிப் பயிற்சி, ஆளுமைத்திறன் மற்றும் மென்திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

இதில் பல்கலை. ஆட்சிக்குழு உறுப்பினர் சி.சஞ்சீவிராஜா, சென்னை டிரான் ஸ்டாப் பயிற்சி நிபுணர் ரகுநாதன் ஆகியோர் பேசினர்.

முன்னதாக மைய ஒருங்கிணைப்பாளர் ஜெ.ஜெயகாந்தன் வரவேற்றார். பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாணவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# கம்ப்யூட்டரை பயன்படுத்தி புதிய மருந்துகளை உருவாக்க வேண்டும்

## பல்கலை. துணைவேந்தர் பேச்சு

காரைக்குடி, பிப். 23: மருந்து கண்டுபிடிக்க குரங்கு, எலி, நாய், தவளைகளுக்கு பதில் ஆய்வுகளுக்கு கம்ப்யூட்டர்களை பயன்படுத்தி புதிய மருந்துகளை உருவாக்க வேண்டும் என அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் சேது சுடலைமுத்து தெரிவித்துள்ளார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் கட்டமைப்பு உயிர் தகவலியல் மற்றும் கணினி சார்ந்த மருந்து கண்டிபிடிப்புகளில் நவீன வளர்ச்சி என்ற தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கு

தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்றார். கருத்தரங்கை துவக்கி வைத்து துணை வேந்தர் சேதுசுடலைமுத்து பேசியதாவது: அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி அறிவியல் துறை சிறப்பு பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை, உயிரி தொழில்நுட்பத்துறை, உயிரி தொடு உணர்வியல் மற்றும் மின்னணுவியல் துறை, நானோ தொழில்நுட்பத்துறை ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும்

நாட்டின் தேவைக்கேற்ப புதிய மருந்துகளை வடிவமைத்தல் மற்றும் உருவாக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். உலக வெப்பமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் காரணமாக மருந்துகளின் தன்மையும், தேவையும் மாறிக்கொண்டே வருகிறது. ஒரு புதிய மருந்தை வடிவமைத்து உருவாக்க சுமார் 14 வருடங்களுக்கு மேலாகிறது. இதில் குரங்கு, எலி, நாய், தவளை போன்ற விலங்குகள் பயன்படுத்தப்படுகிறது. மத்திய அரசு

உள்ளது. இந்நிலையில் கம்ப்யூட்டர்களை பயன்படுத்தி மருந்துகள் உருவாக்குதல் மற்றும் சோதனை செய்வது இன்றியமையாத தேவையாகும். இவ்வாறு பேசினார்.

சென்னை பல்கலைக்கழக படிகவியல் மற்றும் உயிர் இயற்பியல் துறை பேராசிரியர் வேல்முருகன், மதுரை காமராசர் பல்கலைக்கழக கிருஷ்ணசாமி, செல்லியல் மற்றும் மூலக்கூறு மையம் பேராசிரியர் தங்கராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி ★ மதுரை 31-10-2012 19

# மாணவர்கள் மென்திறன்களை வளர்த்து கொள்ள வேண்டும்

## துணை வேந்தர் சேது சுடலைமுத்து பேச்சு

காரைக்குடி, அக்.31-

மாணவர்கள் மென்திறன்களை வளர்த்து கொள்ள வேண்டும் என்று துணை வேந்தர் சேது சுடலைமுத்து கூறினார்.

### மென்திறன் குறித்த பயிற்சி

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தொழில் வழிகாட்டல் மற்றும் கலந்தாய்வு மையத்தின் சார்பில் தொழில் வழிகாட்டல் மற்றும் மென் திறன் குறித்த 3 நாள் பயிற்சி நடைபெற்றது. தொடக்க விழாவுக்கு அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் சேது சுடலை முத்து தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

பாடத்தில் போதிய அறிவு பெற்றிருந்தும், மென் திறன்களில் குறைந்த அளவே திறமை இருப்பதால், மாணவர்களால் சரியான வேலை வாய்ப்பை பெறமுடியாத சூழ்நிலை உள்ளது. இக்கால கட்டத்தில் திறமைகள் மட்டும் போதாது, திறமைகளை நன்கு கையாளவும், திறமைக்கேற்ப வேலைவாய்ப்பை அடைவதற்கும் மென்திறன் பயிற்சி மிகவும் அவசியமாகிறது.

### ஆளுமைதிறன்

கல்வி என்பது அறிவுசார் வளர்ச்சிமட்டும் இல்லை, திறன்சார் கல்வியும் சேர்ந்தது. ஆதலால் மாணவர்கள் ஆங்கிலப் பேச்சாற்றல், கணினிப் பயிற்சி, ஆளுமைத்திறன் மற்றும் மென் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் தாங்கள் தெரிவு செய்த இலக்கை எளிதில் அடைய முடியும்.

மாணவர்களின் மென் திறன்களை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் அழகப்பா பல்கலைக்கழகம் தொடர்ந்து இதுபோன்றபல்வேறு பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் இந்த பயிற் சியில் பங்கு பெற்று தங்களது தனித்திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப் பினர் சஞ்சீவி ராஜா, சென்னை டிரான்ஸ்டாப் பயிற்சி நிபுணர் ரகுநாதன் ஆகியோர் தொடக்க உரையாற்றினார். தொழில் வழிகாட்டல் மற்றும் கலந்தாய்வு மைய ஒருங்கிணைப்பாளர் ஜெயகாந்தன் வரவேற்றார். பல்கலைக்கழகத்தை சேர்ந்த பல்வேறு துறைகளை சார்ந்த மாணவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.



விழாவில் துணைவேந்தர் சேது சுடலைமுத்து பேசிய போது எடுத்த படம்.

# THE HINDU 21.02.2012

THE HINDU • TUESDAY, FEBRUARY 21, 2012

# 'Cost-effective drug need of hour'

## Explore possibilities, VC tells scientists

Special Correspondent

SIVAGANGA: S. Sudalaimuthu, Vice-Chancellor, Alagappa University, has called upon scientists, research scholars and students to explore the possibilities of accelerating the use of modern gadgets to develop cost effective drugs.

Presiding over 4th national symposium cum workshop on "Recent Trends in Structural Bioinformatics and Computer Aided Drug Design (SBCADD-2012)," organised by the Department of Bioinformatics, Alagappa University, Karaikudi, he said that in spite of many developments



**APPEAL:** *S. Sudalaimuthu, Vice-Chancellor, Alagappa University, releasing a souvenir at the national symposium in Karaikudi on Monday.* – PHOTO: L. BALACHANDAR

14 தினகரன்
மதுரை 2 நவம்பர் 2012

# ஆளுமைத்திறனை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்

## துணைவேந்தர் சுடலைமுத்து பேச்சு

காரைக்குடி, நவ.2: ஆங்கில பேச்சாற்றல், கணினிப் பயிற்சி, ஆளுமைத்திறன் மற்றும் மென்திறன்களை மாணவர்கள் வளர்த்து கொள்ள வேண்டும் என அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சுடலை முத்து தெரிவித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக தொழில்வழிகாட்டல் மற்றும் கலந்தாய்வு மையம் சார்பில் தொழில் வழிகாட்டல் மற்றும் மென்திறன் குறித்த பயிற்சி துவக்கவிழா நடந்தது. தொழில் வழிகாட்டல் மற்றும் கலந்தாய்வு மைய ஒருங்கிணைப்பாளர் ஜெயகாந்தன் வரவேற்றார். பயிற்சியை துவக்கி வைத்து அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சுடலை முத்து பேசியதாவது:

அழகப்பா பல்கலைக்கழகத்தில் உள்ள துறைகள் அனைத்து சிறப்பாக செயல்படுகிறது. பாடத்தில் போதிய அறிவு பெற்றிருந்தும் மென் திறன்களில் குறைந்த அளவே திறமை இருப்பதால், மாணவர்களால் சரியான வேலைவாய்ப்பை பெற முடியாத நிலை உள்ளது. தற்போதுள்ள நிலையில் திறமைகள் மட்டும் போதாது. திறமைகளை நன்கு கையாளவும், திறமைக்கேற்ப வேலைவாய்ப்பை பெற மென்திறன் பயிற்சி மிக அவசியம்.

கல்வி என்பது அறிவுசார் வளர்ச்சி மட்டுமில்லை. திறன் சார் கல்வியும் சேர்ந்தது. ஆங்கிலப் பேச்சாற்றல், கணினிப் பயிற்சி, ஆளுமைத்திறன் மற்றும் மென்திறன்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் தாங்கள் தேர்வு செய்த இலக்கை எளிதில் அடையமுடியும். மாணவர்களின் மென்திறன்களை வளர்த்துக் கொள்ளும் நோக்கில் அழகப்பா பல்கலைக்கழகம் பல்வேறு தொடர் பயிற்சி வகுப்புகளை நடத்திவருகிறது. மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும், என பேசினார்.

ஆட்சிக்குழு உறுப்பினர் சஞ்சீவிராஜா, சென்னை டிரான்ஸ்டாய் பயிற்சி நிபுணர் ரகுநாதன் கலந்து கொண்டனர்.




காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த தேசிய இளைஞர் தின விழாவில் துணைவேந்தர் சேதுசுடலைமுத்து பேசினார்.

# விவேகானந்தரின் வழியில் மாணவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ளவேண்டும்

## துணைவேந்தர் சேதுசுடலைமுத்து பேச்சு



விழாவில் அழகப்பா பல்கலைகழக துணைவேந்தர் சேதுசுடலைமுத்து கலந்துகொண்டு பேசியபோது எடுத்தபடம்.

காரைக்குடி,ஜன.14– விவேகானந்தரின் வழியில் மாணவர்கள் தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ள வேண்டும் என அழகப்பா பல்கலைகழக துணைவேந்தர் சேது சுடலைமுத்து பேசினார்

### தேசிய இளைஞர்தினவிழா

காரைக்குடி அழகப்பா பல்கலைகழக உயிரி தகவலியல் துறை மற்றும் நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் சுவாமி விவேகானந்தரின் 150–வது பிறந்தநாள் விழா மற்றும் தேசிய இளைஞர் தினவிழா கொண்டாடப்பட்டது. விழாவில் உயிரி தகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன் வரவேற்று பேசினார். அழகப்பா பல்கலைகழக துணைவேந்தர் சேதுசுடலை முத்து தலைமை தாங்கி பேசியதாவது:–

அழகப்பா பல்கலைகழகத்தில் ஆண்டு முழுவதும் 40க்கும் மேற்பட்ட தேசிய மற்றும் பன்னாட்டு விழாக்கள் குறிப்பிட்ட அதே நாளில் விடுமுறைநாளாக இருந்தாலும் மாணவ–மாணவியர்களுக்கு அந்த விழாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் விழாக்கள் கொண்டாடப் படுகிறது. தீண்டாமை ஒழிப்பு, தன்னம்பிக்கை, ஆன்மீகம் தெரிந்த பாரத பண்புகள், மதச்சார்பின்மை, மகளிர் சுதந்திரம், அனைவருக்கும் கல்வி, அடிப்படை வசதி மேம்பாடு ஆகியவைகள் குறித்து விவேகானந்தர் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

### தன்னம்பிக்கை

மாணவர்களுக்கு ஆன்மீகம் சார்ந்த கல்வி, கல்வி அறிவை தருவதோடு மட்டுமல்லாமல் சமுதாய ஈடுபாட்டினையும் வளர்க்க உதவும். ஆகவே இன்றைய இளைஞர்கள் விவேகானந்தரின் வழியில் தன்னம் பிக்கையினை வளர்த்து கொண்டு வாழ்வில் முன்னேறவேண்டும். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைகழக மேலாண்மையியல் துறை தலைவர் வெங்கடபதி தொடக்க உரையாற்றி பேசினார். விழாவில் அழகப்பா ஆட்சிக்குழு உறுப்பினர் கிருஷ்ணராஜ், தேர்வாணையர் மாணிக்கவாசகம், முனைவர் சரளா, அறிவியல் புல பேராசிரியர்கள், கணினியியல் துறை, அறிவியல் துறை, வங்கி மேலாண்மையியல் துறை, மாணவர்கள் உட்பட .பலர் கலந்துகொண்டனர். நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் குருமூர்த்தி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி முடிவில் நன்றி கூறினார்.

MADURAI
THE HINDU • SATURDAY, JANUARY 14, 2012


# Joint efforts to validate products scientifically

## Lakshmi Seva Sangam joins hands with Alagappa University

Staff Reporter

**DINDIGUL:** The Lakshmi Seva Sangam, a siddha and ayurvedha medicine manufacturing unit of Gandhigram Trust, has joined hands with Alagappa University to improve the total quality management and scientifically validate their products.

This was highlighted at a special interaction between a team of professors from Alagappa University led by Vice-Chancellor S. Sudalai Muthu and technical and management team led by trust secretary K. Shivakumar in the unit at Gandhigram near here on Wednesday.



**DECISION-MAKING:** *A special interaction between a team of Alagappa University professors and Gandhigram Trust members at Gandhigram near Dindigul on Wednesday.* – PHOTO: G. KARTHIKEYAN

Dr. Sudalai Muthu said that the university's experienced professors in bio-technology, nano technology, life sciences, industrial chemistry, bio-sensors, bio-electronics, bio-informatics and industrial chemistry, will test quality of products and raw materials, validate their products scientifically and help the Lakshmi Seva Sangam improve their production system also produce raw materials, mostly medicinal plants, in large scale with uniform quality without losing medicinal properties.

To begin with, the professors will take up products and analyse their culture, verify and test their medicinal effects and chemical content using internationally approved parameters and also check qualities of various raw materials used for making drugs.

Later, they will adopt all procedures, which are followed by medical companies at national and international levels for testing drugs. Such efforts will finally offer a scientific validation to their products, he added.

"All related departments will be converged to coordinate with the trust in improving the overall quality of all products further."

Department of Bio-Technology Head S. Karuthapandian said that financial assistance from the Central Government research organisations will also be sought for this venture.

Each area will be taken as separate project and research will be taken up by experts. With these proven tests, the trust could inform consumers the products' medicinal value and its effects on the body and benefits scientifically, he added.

Besides, the university will also extend technical expertise to the natural dyeing unit of the trust in preparing natural dyes and test the validity of raw materials used for making dyes.

### Technical know-how

Trust Secretary K. Siva Kumar said that the university had also assured to provide technical know-how to upgrade certain machineries, including tablets-making machines and medicines.

University Controller of Examinations V. Manickavasagam and Professors S. Mani Shankar, C. Sanjeevi Raja, C. Sekar, J. Jayakandan, B. Vaseeharan and M. Ramesh were other team members.

THE HINDU

**Today's Paper » NATIONAL » TAMIL NADU**

Published: January 14, 2012 00:00 IST | Updated: January 14, 2012 04:20 IST

# "Emulate ideals of Swami Vivekananda"

Special Correspondent

S. Sudalaimuthu, Vice-Chancellor, on Thursday asked students to emulate the ideals propagated by Swami Vivekananda.

Presiding over the 150th birth anniversary of Swami Vivekananda jointly organised by the Department of Bioinformatics of Alagappa University and National Service Scheme at Karaikudi, he said Swami Vivekananda fought for removal of untouchability, secularism, women's liberation and development and education to all.

Prof. Venkatapathy, Head, Department of Management Studies, Bharathiar University, in his inaugural address, said that Netaji Subhash Chandra Bose followed the principles of Swami Vivekananda and Netaji had appreciated that Vivekananda was the maker of modern India.

He recollected the principles of Vivekananda as conceived by Aravinda, Roman Roland and Tagore. "The principles taught by Vivekananda were applicable to all management disciplines of today."

Swamy Chandrasekarananda, Ramakrishna Thapovanam, Thirupparaithurai, in his special address, highlighted that the youth of today should orchestrate self-confidence, boldness, discipline and human culture for their well being and the welfare of the country.

R. Krishnaraj, Syndicate Member, V. Manickavasagam, Controller of Examinations, and M.S. Sarala, Director, Centre for Fine Arts, spoke.

J. Jeyakanthan, Head, Department of Bioinformatics, welcomed the gathering and T.R. Gurumoorthy, Coordinator, NSS, proposed a vote of thanks.

# DAILY THANTHI 22.02.2012



உலக வெப்பமயமாதல், சுற்றுச்சூழல் சீர்கேடு காரணமாக

# மருந்துகளின் தன்மை, தேவை மாறிவருகிறது

## துணைவேந்தர் சேது.சுடலைமுத்து பேச்சு



கருத்தரங்கில் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சேது.சுடலைமுத்து பேசிய போது எடுத்த படம்.